TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8073058

C

1. District மாவட்டம்: Kanyakumari  PS: காவல்நிலையம்: VBAC, Nagercoil  Year: ஆண்டு:  FIR No.: மு.த.அ. எண்: 1/2020  Date: நாள்: 14.02.2020

2. (i) Act சட்டம்: Cr. P.C.  Sections பிரிவுகள்: 102 Cr.P.C.
   (ii) Act சட்டம்: PC Act 1988  Sections பிரிவுகள்: 7 as r/w PC Act 1988 (as Amended in 2018)
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 13.02.2020  Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் 15.00 hrs  Time to : நேரம் வரை 21.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.02.2020  Time நேரம் : 09.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  About 35 km west, RTO's Office Marthandam.
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. A.V. Moorthy  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Ayyappanpillai
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 06.06.66  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் Inspection Cell Officer, Tirunelveli, Thoothukudi and Kanyakumari Districts.  (g) Address : முகவரி Collector's Office. Tirunelveli

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. K. Palanisamy. RTO. Marthandam, (2) Tr. Sathyakumar. MVI. RTO's Office, Marthandam, (3) Tr. Sathyaraj, Broker (PI) and (4) Tr. Ramesh, Broker (PI).

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. இன்று 14.02.2020 தேதி
காலை சுமார் 09.30 மணிக்கு கோ. மதியழகன், காவல்
துணை கண்காணிப்பாளர், [illegible] மற்றும் கண்-
காணிப்பு துறை [illegible], நான் [illegible]
ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி,
தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுக்
[illegible] அலுவலர் திரு.A.U. சக்தி அவர்கள் நிலையம் [illegible]
[illegible] நடவடிக்கை [illegible] -
[illegible] மனுவுடன் [illegible]
13.02.2020 அன்று [illegible] நடவடிக்கை
எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு

(தொடர்ச்சி பக்கம்...3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
14/2/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
14/2/20

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. MATHIALAGAN
Rank: நிலை DSP ......No. எண் ..........

முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி பக்கம் 3

அனுப்புநர் அ.வ.மூர்த்தி, ஆய்வுகுழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, நாகர்கோவில். அய்யா, பொருள்: திடீர் இணை ஆய்வு -மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகம் - திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்க கேட்டல் தொடர்பாக. நான் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வுகுழு அலுவலராக பணியாற்றி வருகிறேன். நேற்று 13.2.2020 அன்று நான் அலுவலலில் இருந்த போது நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் என்னை தொடர்பு கொண்டு மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நடைபெறும் பணிகளுக்கு வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.பழனிசாமி புரோக்கர் மூலம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் பெற வரும் நபர்களிடம் அந்த வேலைகளை செய்ய லஞ்சம் பெற்று வருவதாக ரகசிய தகவல் கிடைத்திருப்பதாகவும் திடீர் இணை ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுகொண்டதன் பேரில் நான் திருநெல்வேலியிலிருந்து புறப்பட்டு நாகர்கோவில் வந்து சேர்ந்து காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.மதியழகன், ஆய்வாளா திரு.S.ஜான் பெஞ்சமின் மற்றும் ஆய்வாளர் திருமதி T.T.ரமா ஆகியோர்களுடன் கன்னியாகுமரி மாவட்டம் கோழிபோர்விளையில் அமைந்துள்ள மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை 13.2.2020 அன்று பிற்பகல் 15.00 முதல் இரவு 21.30 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது RTO திரு.பழனிசாமி அறைக்கு அருகில் தரையில் கிடந்த பணம் ரூ.34,600/- RTO அலுவலகத்துக்குள் நின்று கொண்டிருந்த திரு.சத்தியராஜ் என்பவர் கையில் வைத்திருந்த பையில் ரூ.7,790/- மற்றும் ஆவணங்கள், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சத்தியகுமார் அறையில் தரையில் கத்தையாக கிடந்த பணம் ரூ.26,920/- மற்றும் எங்களை கண்டதும் கையில் வைத்திருந்த பையை கீழே போட்டுவிட்டு ஓடிய பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த திரு.ரமேஷ் என்பவர் பையிலிருந்த பணம் ரூ.17,280/- மற்றும் ஆவணங்கள் தகுந்த முகாந்திரம் எதுவம் கூறாததால் டிரைவிங் லைசென்ஸ், வாகன பதிவு போன்ற RTO அலுவலக பணிகளுக்காக வரும் நபர்கள் லஞ்சமாக கொடுப்பதற்கு கொண்டு வந்த பணமாக இருக்கலாம் என கருதி மேற்படி மொத்த பணம் ரூ.86,590/- மற்றும் ஆவணங்கள் திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட பணம்

ரூ.86,590/-ம் கைப்பற்றப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலக ஆவணங்களையும் இத்துடன் இணைத்து சமர்ப்பித்துள்ளேன். சம்பந்தப்பட்ட அலுவலர்கள் RTO திரு.K.பழனிசாமி, MVI திரு.சத்தியகுமார், Broker திரு.சத்தியராஜ் மற்றும் Broker திரு.ரமேஷ் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க பணிவுடன் கேட்டு கொள்கிறேன். இப்படிக்கு, -ஒப்பம்- 14/2/2020 ஆய்வுகுழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி.

Sir, Received the complaint on 14.02.2020 at 09.30 hrs along with Proceedings, seized unaccounted money of Rs.86,590/- and documents and registered a case in Nagercoil V&AC Cr.No.1/2020 u/s 102 Cr.P.C 7 of the PC Act 1988 (as amended in 2018). Signed 14/02/2020 DSP, V&AC, Nagercoil.

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் ஆய்வு குழு அலுவலர் அவர்களின் செயல்முறை நடவடிக்கை 13-02-2020ம் தேதி பிற்பகல் 16.45 மணியளவில் கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டம், முளகுமூடு, கோழிபோர்விளையில் அமைந்துள்ள மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் முன்னிலையில் நடைபெற்ற திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை குறிப்பு. முன்னிலை: 1)திரு.A.V.மூர்த்தி, ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். திருநெல்வேலி. 2) திரு.G.மதியழகன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். 3) திரு.S.ஜாண் பெஞ்சமின், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். 4)திருமதி.T.T.ரெமா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில்.

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், முளகுமூடு, கோழிபோர்விளையில் அமைந்துள்ள மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.K.பழனிச்சாமி என்பவர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நடைபெறும் பணிகளுக்கு வாகன உரிமையாளர்களிடமும் ஓட்டுநர் உரிமம் பெற வரும் நபர்களிடமும் அந்தந்த வேலைகளை செய்ய புரோக்கர் மூலம் லஞ்சம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவல் அடிப்படையில் இன்று 13.02.2020-ம் தேதி மதியம் சுமார் 15.00 மணிக்கு முளகுமூடு, கோழிபோர்விளையில் அமைந்துள்ள மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு

வந்து திடீர் சோதனை செய்யப்பட்டது. மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் தென்பக்கம் மேல் ஓரத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் அறைக்கு செல்லும் வழியாக உள்ளே வந்தபோது கிழக்கு பார்த்து அமைந்துள்ள வட்டார போக்குவரத்து அலுவலர் அறையில் கண்ணாடி கேபினுக்குள் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.K.பழனிச்சாமி என்பவர் வடக்கு பார்த்து அமர்ந்திருந்தார். வட்டார போக்குவரத்து அலுவலரிடம் பணம் ஏதும் வைத்துள்ளாரா என்று கேட்டபோது அவரது சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.430/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பணம் ரூ.430/-ஐ அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலர் அறை சோதனை செய்யப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலர் அறையை விட்டு வெளியே வந்த போது வட்டார போக்குவரத்து அலுவலர் அறையின் கீழ்பக்கம் உள்ள காலியிடத்தில் வடகிழக்கு மூலையில் தரையில் கத்தையாக பணம் கிடந்தது. மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.34,600/- (500X64=32,000, 200X5=1,000, 100X16 =1,600) இருந்தது. மேற்படி பணத்தை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.பழனிச்சாமியிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் ஏதும் சொல்லவில்லை. அதனால் மேற்படி பணம் ரூ.34,600/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதற்கு சற்று வடக்கே சந்தில் கையில் Fashion Fabrics என்று எழுதப்பட்ட வெள்ளை நிற பாலிதீன் கவருடன் நின்று கொண்டிருந்த நபரை விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் திரு.சத்தியராஜ் என்றும், லைசென்ஸ் புதுப்பிக்க வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் இருந்த பையை சோதனை செய்தபோது அந்த பையில் சில கோப்புகளும், இரண்டு கத்தையாக பணமும் இருந்தது. மேற்படி பையில் கத்தையாக இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்த போது அதில் ரூ.7,790/- (2000X1=2000, 500X9=4,500, 200X4=800, 100X3=300, 50X2=100, 20X4=80, 10X1=10) இருந்தது. மேலும் மேற்படி கையில் இருந்த பையில் உள்ள கோப்புகளை ஆய்வு செய்தபோது அதில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த கீழ்கண்ட கோப்புகள் இருந்தது. (1) N.A.M. மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் TN 75 AA 7129 மற்றும் TN 75 AB 4793 என்ற இரு வாகனளுக்கு புதிய அனுமதி சீட்டு கேட்டு விண்ணப்பித்த கோப்பு ந.க.எண். 30544/A3/2019 (பக்கம் 1 முதல் 13 பக்கங்களை கொண்டது). (2) திரு.சௌந்தரராஜ் என்பவர் தனது வாகனம் TN 75 AK 6880 என்ற வாகனத்திற்கு புதிய அனுமதி சீட்டு கேட்டு

விண்ணப்பித்த கோப்பு ந.க.எண்.36636/B3/2019 (பக்கம் 1 முதல் 7 பக்கங்களை கொண்டது). (3) ஜெயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் வாகனம் TN 75 AE 6680 மற்றும் TN 75 R 6356 என்ற இரு வாகனத்திற்கும் புதிய அனுமதி சீட்டு கேட்டு விண்ணப்பித்த கோப்பு ந.க.எண்.30555/A3/2019 (பக்கம் 1 முதல் 13 பக்கங்களை கொண்டது). (4) திரு.ஜஸ்டின் கிரன்ராஜ் என்பவர் ஓட்டுனர் உரிமம் நகல் கேட்டு விண்ணப்பித்த மனுவின் கோப்பு ந.க.எண்.32659/B3/2018 (பக்கம் 1 முதல் 26 பக்கங்களை கொண்டது),

மேற்படி பணம் மற்றும் கோப்புகள் பற்றி திரு.சத்தியராஜிடம் கேட்டபோது முன்னுக்குபின் முரணாக பதில் சொன்னதால் பணம் ரூ.7,790/- மற்றும் மேற்படி கோப்புகளை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலர் அறைக்கு கீழ்பக்கத்தில் அமைந்துள்ள வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் அறைக்கு வந்தபோது அங்கு நேர்முக உதவியாளர் திருமதி.S.விஜயலட்சுமி என்பவர் இருந்தார். அவரிடம் பணம் ஏதும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தன்னிடம் ரூ.650/- எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவர் எடுத்து ஆஜர் செய்த அலுவலர் கையிருப்பு ரொக்க பதிவேட்டில் அவர் பதிவு செய்த பணமும், கையில் இருந்த பணமும் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.650/-ஐ நேர்முக உதவியாளரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த அறையில் நேர்முக உதவியாளர் இருக்கைக்கு கீழ்புறத்தில் அமர்ந்திருந்த கண்காணிப்பாளர் திருமதி.S.வெள்ளை துரைச்சி என்பவர் அமர்ந்திருந்தார். அவரிடம் பணம் ஏதும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தன்னிடம் இருந்த ரூ.500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அலுவலர் கையிருப்பு ரொக்க பதிவேட்டில் அவர் பதிவு செய்த பணமும், கையில் இருந்த பணமும் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.500/-ஐ கண்காணிப்பாளரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. நேர்முக உதவியாளரின் தென்பக்கம் கணக்காளர் அறை இருந்தது. கணக்காளர் திருமதி.செல்வி விடுப்பில் உள்ளதாகவும், கட்டணம் மட்டும் பி4 இருக்கை உதவியாளர் திரு.சாலு வேத பிரின்ஸ் என்பவர் வசூல் செய்ததாகவும் நேர்முக உதவியாளர் திருமதி.விஜயலட்சுமி தெரிவித்தார். மேற்படி அறையை சோதனை செய்தபோது பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. கணக்காளர் அறையின் கீழ்பக்கம் உள்ள 'அ3' இருக்கை அறை உள்ளது. மேற்படி அறையை சோதனை செய்தபோது அந்த அறையில் பணம் ஏதும் இல்லை. 'அ3' இருக்கையின் கீழ்புறம் வடபக்கம் 'அ2' இருக்கை அறை உள்ளது. மேற்படி அறையில் 'அ2' இருக்கை உதவியாளர் திரு.குமார் என்பவர்

அமர்ந்திருந்தார். அவரிடம் பணம் ஏதும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தன்னிடம் இருந்த ரூ.450/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அலுவலர் கையிருப்பு ரொக்க பதிவேட்டில் அவர் பதிவு செய்த பணமும், கையில் இருந்த பணமும் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.450/-ஐ திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ‘அ2’ இருக்கையின் கீழ்புறம் உள்ள மோட்டார் வாகன அறைக்குள் நுழைந்தபோது அங்கு நின்று கொண்டிருந்த ஒரு நபர் தான் வைத்திருந்த பையை போட்டுவிட்டு ஓடிவிட்டார். மேற்படி பையை எடுத்து சோதனை செய்தபோது அது இளம் பச்சை கலராகவும், ஐந்து அறை கொண்டதாகவும், V-ONE என்று ஸ்டிக்கர் ஒட்டியதாகவும் இருந்தது. அந்த Bag-ஐ சோதனை செய்த போது முன்பிருந்து இரண்டாவது அறையில் ரமேஷ் த/பெ ஆறுமுகம் 3-16/NA மீனாட்சி செட்டி தெரு, கோட்டார் நாகர்கோவில் என்பவருக்குரிய பான்கார்டு AOWPR7081Lம், வாக்காளர் அடையாள அட்டை எண் RRJ1747849-ம் இருந்தது. மேலும் அந்த பேக்கின் மூன்றாவது அறையில் கத்தையாக பணமும், வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் கீழ் கண்ட கோப்புகள் இருந்தது. (1) திரு.P.ஹரிகுமார் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு ஓட்டுனர் உரிமம் நகல் கேட்டு விண்ணப்பித்த மனுவின் கோப்பு எண் 005648 (பக்கம் 1 முதல் 23 பக்கங்களை கொண்டது), (2) திரு.சந்தோஷ் ஜெயன் என்பவர் தனது வாகனம் TN 75 AM 2743க்கு புதிய அனுமதி சீட்டு கேட்டு கொடுத்த மனுவின் கோப்பு எண் 005099 (பக்கம் 1 முதல் 19 பக்கங்களை கொண்டது), (3) சுனிதா என்பவர் தனது வாகனம் TN 75 AM 1289க்கு புதிய அனுமதி சீட்டு கேட்டு கொடுத்த மனுவின் கோப்பு எண் 065030 (பக்கம் 1 முதல் 19 பக்கங்களை கொண்டது), (4) நிதிஷ் என்பவர் தனது புதிய வாடகை காருக்கு அனுமதி சீட்டு கேட்டு கொடுத்த மனுவின் கோப்பு ந.க.எண 001879/B3/2020 (பக்கம் 1 முதல் 13 பக்கங்களை கொண்டது), (5) மேரி ஷாலினி என்பவர் தனது வாகனம் TN 75 AM 2103-க்கு புதிய அனுமதி சீட்டு கேட்டு கொடுத்த மனுவின் கோப்பு ந.க.எண 54400/B3/19 (பக்கம் 1 முதல் 15 பக்கங்களை கொண்டது). மேற்படி பேக்கில் இருந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.17,280/-(2000X3=6000, 500X16=8000, 200X9=1,800, 100X12=1,200, 50X4=200, 20X4=80) இருந்தது. மேற்படி பேக்கை போட்டுவிட்டு ஓடிய திரு.ரமேஷை பற்றி திரு.சத்திராஜிடம் கேட்டபோது அவர் ஓடிய நபர் பெயர் ரமேஷ் என்றும், நாகர்கோவில் கோட்டார் பகுதியை சேர்ந்தவர் என்றும், தன்னைப்போல் விண்ணப்பதாரர்களுக்கு ஓட்டுனர் உரிமம் புதுப்பிக்க, வாகனம் பதிவு செய்வது போன்ற RTO அலுவலக பணிகளை செய்து வரும் நபர் என்றும்

குறிப்பிட்டார். மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அறையை சோதனை செய்தபோது மேஜையின் கீழ் கத்தையாக பணம் கிடந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.26,920/- (2000X7=14,000, 500X21=10,500, 200X5=1,000, 100X14=1,400, 20X1=20) இருந்தது. மேற்படி தரையில் கிடந்த பணம் மற்றும் பேக்கில் இருந்த பணம் மற்றும் கோப்புகள் பற்றி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கேட்ட போது தகுந்த முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.44,200/- மற்றும் கோப்புகளும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் அறையின் வடபக்கம் அமைந்துள்ள அறையில் B4 இருக்கை பதிவறை எழுத்தர் திரு.சாலவேத பிரின்ஸ் என்பவர் கிழக்கு பார்தது அமர்ந்திருந்தார். அவரிடம் பணம் ஏதும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தன்னிடம் இருந்த ரூ.340/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அலுவலர் கையிருப்பு ரொக்க பதிவேட்டில் அவர் பதிவு செய்த பணமும், கையில் இருந்த பணமும் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.340/-ஐ திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இருக்கைக்கு கிழக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த B2 இருக்கை இளநிலை உதவியாளர் திரு.சுவாமிதாசன் வடக்கு பார்த்து அமர்ந்திருந்தார். அவரிடம் பணம் ஏதும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தன்னிடம் இருந்த ரூ.220/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அலுவலர் கையிருப்பு ரொக்க பதிவேட்டில் அவர் மேற்படி பணத்தை பதிவு செய்யாததை பற்றி கேட்டபோது அவர் இன்று தான் தாமதமாக அலுவலகத்திற்கு வந்ததாகவும் அதனால் பதிவேட்டில் பதிவு செய்ய மறந்துவிட்டதாகவும், மேற்படி பணம் தனது செலவுக்காக கொண்டு வந்த பணம் என்று தெரிவித்ததால் பணம் ரூ.220/-ஐ திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையை சோதனை செய்தபோது பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. இந்த அறையின் கீழ் பக்கம் சிறிய ரெக்காடு அறை உள்ளது. அதன் கீழ்புறம் காலியிடம் உள்ளது. மோட்டார் வாகன அறையின் கீழ்புறம் உள்ள அறையில் B3 இருக்கை இளநிலை உதவியாளர் திரு.இராஜதுரை என்பவர் வடக்கு பார்த்து அமர்ந்திருந்தார். அவரிடம் பணம் ஏதும் உள்ளதா என்று கேட்டபோது அவர் தன்னிடம் இருந்த ரூ.600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அலுவலர் கையிருப்பு ரொக்க பதிவேட்டில் அவர் பதிவு செய்த பணமும், கையில் இருந்த பணமும் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.600/-ஐ திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையின் கீழ்பக்கம் அலுவலகத்தை விட்டு வெளியே செல்லும் வழி உள்ளது. அதன் கீழ்புறம் வாகனம் பதிவு செய்யும் அறை உள்ளது. மேற்படி அறையில் உதவியாளர்கள் யாரும் இல்லை. அந்த

அறையை சோதனை செய்தபோது பணம் ஏதும் இல்லை. இந்த அறையின் கீழ்புறம் Bonton Software நிறுவனத்தார் ஓட்டுனர் உரிமம் வழங்க போட்டோ எடுக்கும் அறை உள்ளது. அந்த அறையில் திரு.ஜாண் லூயிஸ் என்பவர் போட்டோ எடுக்கும் பணியில் இருந்தார். அவரை சோதனை செய்தபோது அவரிடம் ரு,2,020/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது சொந்தப்பணம் செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதால் மேற்படி பணத்தை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதன் கீழ்புறம் உள்ள அறையில் கணினி பிரிண்டர் இருந்தது. இந்த அறைக்கு எதிரே ஓட்டுனர் உரிமத்திற்கு போட்டோ எடுக்க வருபவர்களின் காத்திருப்பு ஹால் உள்ளது. இதன் கீழ்புறம் ஆவண அறை உள்ளது. வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.பழனிச்சாமி என்பவரை விசாரித்து அவரிடம் ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது. அப்போது அவர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனங்களுக்கு பேன்சி எண் வாங்குவதற்கு மட்டும் பணமாக பெறப்படும் என்றும், மற்ற அனைத்து கட்டணமும் ஆன்லைனில் தான் கட்ட வேண்டும் என்று தெரிவித்தார். இன்று 13.02.2020ம் தேதியில் ஆறு வாகனங்களுக்கு ரூ.12,000/- மட்டும் பணமாக பெறப்பட்டு அதனை வங்கியில் செலுத்த கொடுத்தனுப்பப் பட்டுள்ளது. மேலும் 14.42 மணி வரை ஆன்லைனில் செலுத்திய கட்டணம் ரூ.19,12,806/- ஆகும். மேலும் 2018-19க்கான கொடிநாள் வசூல் முடித்து அரசுக்கு செலுத்தப்பட்டு விட்டதாகவும், நடப்பு ஆண்டிற்கான அதாவது 2019-2020ம் வருடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கொடிநாள் தொகையான ரூ.13,90,000/- இது வரை பணியாளர்களுக்கு பிரித்து கொடுக்கப்படவும் இல்லை, வசூல் செய்யப்படவும் இல்லை. இன்றைய வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டுள்ள திருநெல்வேலி செயலாக்க பிரிவில் இருந்து மாற்று பணியாக பணிபுரிந்து வரும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சத்திய குமார் என்பவரை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.பழனிசாமியிடம் கேட்டபோது அவர் இன்று 13.02.2020ம் தேதி காலை பணிக்கு வந்து வருகை பதிவேட்டில் கையெழுத்திட்டுவிட்டு வாகன ஆய்வு முடித்து தன்னிச்சையாக தன்னிடம் அனுமதி ஏதும் பெறாமல் சென்றுவிட்டார் என்றும், அவரது செல் போன் எண் 9384808464-ல் தொடர்பு கொண்டபோது சுவிட்ச் ஆப் என்று வந்ததாகவும் சொன்னார். இந்த திடீர் சோதனை முடியும் வரை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சத்தியகுமார் அலுவலகத்திற்கு வரவில்லை. அவர் பயன்படுத்தும் அவருடைய சொந்த கார் TN 09 BH 5775 TATA MANZA கார் அலுவலக வளாகத்தில் நிற்பதாகவும் சொன்னதன்பேரில் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.பழனிசாமி முன்னிலையில் அந்த காரை சோதனை செய்து பார்த்தபோது அவரது பெயர் வில்லை தாங்கிய காக்கி யூனிபார்ம்

சட்டை தொங்க விடப்பட்டிருந்தது. பணமோ, வேறு ஆவணங்களோ காணப்படவில்லை. எனவே மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சத்தியகுமார் திடீர் இணை ஆய்வை தவிர்க்கும் பொருட்டு அலுவலகத்திற்கு வராமல் சென்றுள்ளதாக தெரிகிறது. மேலும் திடீர் இணை ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணத்திற்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் இந்த பணம் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.பழனிசாமி மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சத்தியகுமாருக்கும் வாகன உரிமையாளர்கள் மற்றும் புரோக்கர்கள் அந்தந்த வேலைகளை செய்ய லஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டு வந்த பணமாக இருக்கலாம் என கருதி அலுவலகத்தில் அநாதையாக கிடந்த மற்றும் தனி நபரிடம் இருந்த பணம் மொத்தம் ரூ.86,590/- மற்றும் தனி நபர் வைத்திருந்த மேற்படி கோப்புகளையும் இந்த செயல் முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. இந்த நடவடிக்கை குறிப்பு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மடி கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரிண்டர் மூலம் வட்டார போக்கு வரத்து அலுவலகத்தில் உள்ள மின் இணைப்பு மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது. இந்த சோதனைக்கான செயல்முறை நடவடிக்கைகள் இன்று 13.02.2020-ம் தேதி இரவு 21.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

The original FIR, Complaint, Proceedings of the Inspection Cell Officer, Tirunelveli, Thoothukudi and Kanyakumari Districts @ Tirunelveli, were sent to the Honourable Chief Judicial Magistrate cum Special Judge Court, Kanyakumari District @ Nagercoil and copies sent to the concerned higher officials.

14/02/20.
(G. MATHIALAGAN)
DSP, V&AC,
Nagercoil.